**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.</u>**

**CC.No.352/2022 Date: 10.06.2026**

**PW 1 : திரு.இராமகோவிந்தன் த/பெ. நாராயணசாமி**

துவக்க நேரம் 03.06 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எங்களுக்கும், அன்பரசன் வகையறாவிற்கும் இடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் ஆமாம். சம்பவம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 22.05.2022 அன்று காலை 11.00 மணிக்கு மேல் நடந்தது. எனது போலிசார் விசாரணையில், நான் கொடுத்த புகாரில் வழக்கு சம்பவம் காவல் நிலையத்திற்கு உள்ளே நடந்துவிட்டது என்று தவறாக கொடுத்துவிட்டேன் என்றும், உண்மையில் வழக்கு சம்பவம் காவல் நிலையத்திற்கு வெளியில்தான் நடந்தது என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் வழக்கு சம்பவம் காவல் நிலையத்திற்கு உள்ளேதான் நடைபெற்றது.

2) வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்பதால்தான் புகாரில் ஒரு மாதிரியாகவும், போலிசார் விசாரணையில் ஒரு மாதிரியாகவும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, காவல் நிலையத்தில் வைத்து அன்பரசன் என்பவர், என்னை அடித்தார், அதை காவல் நிலைய அதிகாரிகள் வந்து தடுத்தார்கள்.

3) எனது போலிசார் விசாரணையில் காவல் நிலையத்திற்கு 11.30 மணிக்கு வந்ததாகவும், தற்பொழுது எனது முதல் விசாரணையில் காவல் நிலையத்திற்கு 11.00 மணிக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றதாகவும் முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) எங்களுக்கிடையே சிவில் வழக்கு நிலுவையில் இருப்பதால் அவரை பழிவாங்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அலமேலு என்பவர்

கொடுத்த புகாரை விசாரிப்பதற்காக காவல் நிலையத்திற்கு அழைத்தபொழுது நானும், அலுமேலுவுடன் சென்றபொழுதுதான் இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்றால் ஆமாம்.

5) எனது புகாரில், அன்பரசன், என்னை கையில் அடித்தாரா, முகத்தில் அடித்தாரா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் வழக்கு சம்பவம் நடைபெற்றிருந்தால் அன்பரசன், என்னை எந்த இடத்தில் அடித்தார் என்று குறிப்பிட்டு புகாரில் சொல்லியிருந்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

6) சிவில் வழக்கு நிலுவையில் இருப்பதால், எதிரியின் மீதிருந்த முன்விரோதத்தின் காரணமாக, நான் பொய் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.19 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.10 17:47:33 +0530

Judicial Magistrate No.2, Attur.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.</u>**

**CC.No.352/2022 Date: 10.06.2026**

**PW 2 : திரு.சண்முகசுந்தரம் த/பெ. ஜெயராமன்**

துவக்க நேரம் 03.20 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கு சம்பவம் எப்பொழுது நடைபெற்றது என்றால் 22.05.2022 அன்று காலை 11.30 மணியளவில் நடைபெற்றது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நேரில் பார்த்தேன். நான், பார்வை மகஜர் ஸ்டேட்மென்டில் மட்டும் கையொப்பம் செய்துவிட்டு, எனக்கும், எதிரிக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன்.

2) நான், காவல் நிலையத்திற்கு எதற்காக வந்தேன் என்றால் என் மீது உள்ள ஒரு வழக்கு விசாரணைக்காக வந்தேன். எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றால் காலை 10.30 மணிக்கு வந்து மதியம் 12.00 மணி வரைக்கும் இருந்தேன்.

3) நான் சம்பவ நாளன்று வழக்கு விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வராமல் அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவ நாளன்று ஒரு வழக்கு விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வந்ததாகவும், இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) பார்வை மகஜர் தயார் செய்த பொழுது, நான் அந்த இடத்தில் ஆஜரில் இல்லாமலும், எதிரியின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாகவும், காவல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் பார்வை மகஜரில் கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

5) மாதிரி வரைபடத்தை, காவல் அதிகாரிகள் எத்தனை மணிக்கு வரைந்தார்கள் என்றால் மதியம் 12.00 மணிக்கு வரைந்தார்கள். நான், எனது முதல் விசாரணையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பகல் 01.30 மணியளவில் என்று குறிப்பிட்டுவிட்டு, தற்பொழுது 12.00 மணிக்கு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்று முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.10 17:47:41 +0530

Judicial Magistrate No.2, Attur.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

**CC.No.352/2022 Date: 10.06.2026**

**PW 4 : திரு.அண்ணாமலை த/பெ. கோவிந்தசாமி**

துவக்க நேரம் 03.30 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நேரில் பார்த்தேன். நான், எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் காலை 10.30 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். எதற்காக காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் எனது உறவினரான அலமேலு என்னை அழைத்ததால் நான் சென்றேன்.

2) நான், காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு திரும்ப சென்றேன் என்றால் சுமார் 12.00 – 01.00 மணிக்குள் திரும்ப சென்றுவிட்டேன். நான், காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜரில் காவல் அதிகாரிகள் கேட்டுக்கொண்தற்கிணங்க சம்பவத்தை நேரில் பார்க்காமல் பார்வை மகஜரில் ஒரு சாட்சியாக இருந்து, அலமேலு எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.37 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.10 17:47:50 +0530

Judicial Magistrate No.2, Attur.